# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 28/2021 | **CNR No.** | : | TNKI13-000022-2021 |
| **Name** | : | பாஸ்கர் | **Father's Name** | : | பெரியசாமி |
| **Witness for** | : | வாதி | **Calling** | : | PW1 |
| **Age** | : | 66 | **Village** | : | பெரியார் நகர் (ஊத்தங்கரை) |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11.15 | **End Time** | : | 11:47 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 02.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) வழக்கு சொத்து சர்வே எண். 1/6 கே மற்றும் சர்வே எண். 19/31 சி மற்றும் சர்வே எண். 19/31 பி லும் ரோடு செல்கிறது என்றால் சர்வே எண். 19/31 பில் செல்லவில்லை, அதையும் சேர்த்து தான் 16 அடிக்கு செல்கிறது என்றால் சரியல்ல. வடக்கு தெற்காக 120 அடியும் பின்பு கிழக்காக திரும்பி 65 அடியாக சென்று மீண்டும் தெற்கு நோக்கி 16 அடி அகலத்தில் செல்வது சர்வே எண்.19/31 பி – யிலும் செல்கிறது என்றால் சரியல்ல. சர்வே எண்.1/6 கே நிலத்தின் நீள அகலம் குறிப்பிடவில்லை என்றால் இல்லை. அதன் கிழக்கு புற நீளம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்கு புற நீளம் தெரியுமா என்றால் தெரியாது. வடக்கு புறம் எவ்வளவு அளவு என்றால் 32 அடியாகும், தெற்கு புறம் எவ்வளவு அளவு என்றால் 16 அடி ஆகும். மேற்படி அளவுகளில் தான் சர்வே எண்.1/6 கே–வில் பாதையாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 19/31 சி நிலத்தின் கிழக்கு பக்க

அளவு என்னவென்றால் எனக்கு தெரியாது, வடக்கு பக்கம் அளவு தெரியுமா என்றால் தெரியாது, மேற்கு பக்க அளவு தெரியுமா என்றால் 25 அடி இருக்கும், தெற்கு பக்கம் 10 அடி இருக்கும். மேற்படி அளவுகளை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

(2) வழக்கு சொத்தில் கால்வாய் உள்ளது என்றால் சரிதான். எந்த எந்த சர்வே எண்களில் செல்கிறது என்றால் சர்வே எண். 1/6 எஸ்–ல் செல்கிறது. எவ்வளவு அகலத்திற்கு செல்கிறது என்றால் 4 அடி அகலம் ஆகும். எனது இடத்தில் 27 ¾ நீளத்தில் செல்கிறது அவரது இடத்திலும் செல்கிறது. வழக்கு சொத்துக்களில் எவ்வளவு அகல நீளத்தில் கால்வாய் செல்கிறது என்றால் சர்வே எண். 19/31 சில் கால்வாய் இல்லை, சர்வே எண். 1/6 கே–வில் 42 அடி நீளத்திலும் 4 அடி அகலத்தில் செல்கிறது. எனது வழக்குரையில் மேற்படி கால்வாயின் நீள அகலம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குரை காட்டப்பட்டு, சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

(3) சர்வே எண். 1/6 கே, சர்வே எண். 19/31 சி ஆகியவற்றின் செக்குபந்தி விவரம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தோராய வரைபடத்தில் கால்வாயை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது வரைபடத்தில் சர்வே எண். 1/6 கே காலி இடமாகவும் அதில் பாதை செல்வதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தோராய வரைபடத்தில் பீமராஜ் போட்டதாக சொல்லும் போரை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண். 1/6 கேவில் 16 அடி பாதையில் போர் இல்லை என்றால் சரிதான். 16 அடி பாதைக்கு சர்வே எண்.1/6 கே வில் தான் உள்ளது என்றால் சரிதான், ரெட்டிப்பட்டி பஞ்சாயத்தில் உள்ளது,

மேற்படி போர் எப்போது போடப்பட்டது என்றால் 2020 ஆண்டு ஆகும். போர் போட்ட இடத்தை எவ்வளவு நாட்களாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் எப்போது நிலம் வாங்கினேன் என்றால் 1991ல் வாங்கினேன். அப்போது இருந்து இருக்கிறார்களா என்றால் இல்லை அதன் பிறகு தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள், எப்போது இருந்து என்று எனக்கு தெரியாது.

(4) எனது கிரைய பத்திரத்தில் மேற்படி 16 அடி பாதையை தான் எல்லையாக காட்டி வாங்கியுள்ளேனா என்றால் சரிதான். 16 அடிக்கு மேற்கு பக்கத்தில் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு இருந்தே பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் 16 அடி பாதை எல்லையாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.1/6 கே– வில் 16 அடி வண்டி பாதையை தவிர மீதி இடத்திற்கு தடை உத்தரவு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1/6 கே வில் 16 அடி பாதையை பிரதிவாதிகள் தடை செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.19/31பி என்பது பிரதிவாதிகள் நிலம் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.19/31பி நான் பாதை போட முயற்சித்தேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.19/31சி–ன் உரிமையாளர் யார் என்றால் மாலிக் பாஷா ஆவார், அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.19/31பி–ல் பாதை இல்லை என்றும் அதை நான் பாதையாக பயன்படுத்தவில்லை என்றும் அதில் எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் சரிதான்.

(5) சர்வே எண். 1/6 கே அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான், எட்டிப்பட்டி கிராம பஞ்சாயத்திற்கு செந்தமானது. அரசு

அதிகாரிகளை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அரசு அதிகாரிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண்.19/31 பி என்பது பிரதிவாதிகளுக்கு சொந்மான வீட்டு மனை என்றும் அதனுடன் சர்வே எண். 1/6 கே –வில் கிழமேல் வடபுறமும் 17 அடி நீளம் தென்வடல் மேற்கு புறம் 53 அடியும், தென்வடல் கிழக்கு புறம் 50 அடியும், முக்கோண வடிவில் உள்ள 36 சதுர மீட்டர் 387 சதுர அடிகள் கொண்ட பகுதியை 3 ம் பிரதிவாதி 1978 ம் ஆண்டில் இருந்து உலக அறிய அனுபவித்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்தையும் சேர்த்து வழக்கு சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1978 முதல் அனுபவித்து வருகிறார் என்றும் அதில் அனுபவித்து வரும் பகுதியில் தான் போர் வெல் அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(6) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். ( **நீதிமன்ற ஆணையர் அறிக்கை – நீ.ம.சா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிரதிவாதிகள் அனுபவத்திற்கு இடையூறு செய்ய வேண்டும் என்று அவர்கள் அனுபவித்து வரும் அளவையும் சேர்த்து சொத்து விவரமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. கழிவு நீர் கால்வாய், பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்து விவரம் ஆகியவற்றை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.1/6 கே வில் 16 அடி பாதையை நானோ பொதுமக்களோ அனுபவித்து

வருவதற்கு பிரதிவாதிகள் எந்தவித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல, தடுத்து இடையூறு செய்து வருகிறார்கள்.

(7) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND

District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai